## 25. அகவல்

294.கயங்கெழு கருங்கடல் முதுகு தெருவுபட
இயங்குதிமில் கடவி எறியொளி நுளையர்
நெய்ம்மின் கவரல் வேண்டிக் கைம்மிகத்
தால வட்டம் ஏய்ப்ப மீமிசை
முடிகெழு தருவலை வீசி முந்நீர்க்
குடரென வாங்கிக் கொள்ளை கொண்ட
சுரிமுகச் சங்கும் சுடர்விடு பவளமும்
எரிகதிர் நித்திலத் தொகுதியும் கூடி
விரிகதிர் நிலவும் செக்கரும் தாரகை
உருவது காட்டும் உலவாக் காட்சித்
தண்ணந் துறைவன் தடவரை அகலம்
கண்ணுறக் கண்டது முதலா ஒண்ணிறக்
காள மாசுணம் கதிர்மதிக் குழவியைக்
கோளிழைத் திருக்கும் கொள்கை போல
மணிதிகழ் அகலத்து அண்ணல் ஆரூர்
ஆர்கலி விழவின் அன்னதோர்
பேரலர் சிறந்தது சிறுநல் லூரே.

## 26. வெண்பா

295.ஊரெலாம் துஞ்சி உலகெலாம் நள்ளென்று
பாரெலாம் பாட இந்தப் பாயிருட்கண் – சீருலாம்
மாந்துறைவாய் ஈசன் மணிநீர் மறைகாட்டுப்
பூந்துறைவாய் மேய்ந்துறங்கா புள்.

## 27. கட்டளைக் கலித்துறை.

296.புள்ளும் துயின்று பொழுதிறு மாந்து கழுதுறங்கி
நள்ளென்ற கங்குல் இருள்வாய்ப் பெருகிய வார்பனிநாள்
துள்ளுங் கலைக்கைச்சுடர்வண்ணனைத் தொழுவார் மனம் போன்று
உள்ளும் உருக் ஒருவர்திண் தேர்வந்து உலாத்தருமே.

## 28. அகவல்

297.உலாநீர்க் கங்கை ஒருசடைக் கரந்து
புலால்நீர் ஒழுகப் பொருகளிறு உரித்த
பூத நாதன் ஆதி மூர்த்தி
திருமட மலைமகட்கு ஒருகூறு கொடுத்துத்தன்
அன்பின் அமைந்தவன் ஆரூர் நன்பகல்
வலம்புரி அடுப்பா மாமுத்து அரிசி
சலஞ்சலம் நிறைய ஏற்றி நலந்திகழ்
பவளச் செந்தீ மூட்டிப் பொலம்பட
இப்பியந் துடுப்பால் ஒப்பத் துழாவி
அடாஅது அட்ட அமுதம் வாய்மடுத்து
இடாஅ ஆயமோடு உண்ணும் பொழுதில்
திருந்திழைப் பணைத்தோள் தேமொழி மாதே
விருந்தின் அடியேற்கு அருளுதி யோவென
முலைமுகம் நோக்கி முறுவலி இறைஞ்சலின்
நறைகமழ் எண்ணெய்ச் சிறுநுண் துள்ளி
பொங்குபுனல் உற்றது போலஎன்
அங்கம் எல்லாந் தானா யினளே.

## 29. வெண்பா

298.ஆயினஅன் பாரே அழிப்பர் அனலாடி
பேயினவன் பாரோம்பும் பேரருளான் – தீயனவன்
கண்ணாளன் ஆரூர்க் கடலார் மடப்பாவை
தண்ணாரும் கொங்கைக்கே தாழ்ந்து.

## 30. கட்டளைக் கலித்துறை

299.தாழ்ந்து கிடந்த சடைமுடிச் சங்கரன் தாள்பணியா
தாழ்ந்து கிடந்துநை வார்கிளை போலயர் வேற்குஇரங்கிச்
சூழ்ந்து கிடந்த கரைமேல் திரையென்னும் கையெறிந்து
வீழ்ந்து கிடந்தல றித்துயி லாதி விரிகடலே.

## சேரமான் பெருமாள் நாயனார் அருளிய
## 3. திருக்கைலாய ஞான உலா

300.திருமாலும் நான்முகனும் தேர்ந்துணராது அன்றங்கு
அருமால் உற அழலாய் நின்ற – பெருமான்
பிறவாதே தோன்றினான் காணாதே காண்பான்
துறவாதே யாக்கை துறந்தான் – முறைமையால்
ஆழாதே ஆழ்ந்தான் அகலாது அகலியான்
ஊழால் உயராதே ஓங்கினான் – சூழொளிநூல்
ஓதாது உணர்ந்தான் நுணுகாது நுண்ணியான்
யாதும்அணுகாது அணுகியான் – ஆதி
அரியாகிக் காப்பான் அயனாய்ப் படைப்பான்
அரனாய் அழிப்பவனுந் தானே – பரனாய
தேவர் அறியாத தோற்றத்தான் தேவரைத்தான்
மேவிய வாறே விதித்தமைத்தான்– ஒவாதே
எவ்வுருவில் யாரொருவர் உள்குவர் உள்ளத்துள்
அவ்வுருவாய்த் தோன்றி அருள்கொடுப்பான்–எவ்வுருவும்
தானேயாய் நின்றளிப்பான் தன்னிற் பிறிதுருவம்
ஏனோர்க்கும் காண்பரிய எம்பெருமான் – ஆனாத
சீரார் சிவலோகம் தன்னுள் சிவபுரத்தில்
ஏரார் திருக்கோயில் உள்ளிருப்ப– ஆராய்ந்து
செங்கண் அமரர் புறங்கடைக்கண் சென்றுஈண்டி
எங்கட்குக் காட்சியருள் என்றிரப்ப – அங்கொருநாள்
பூமங்கை பொய்தீர் தரணி புகழ்மங்கை
நாமங்கை என்றிவர்கள் நன்கமைந்த –சேமங்கொள்
ஞானக் கொழுந்து நகராசன் தன் மடந்தை
தேன்மொய்த்த குஞ்சியின்மேல் சித்திரிப்ப–ஊனமில்சீர்
நந்தா வனமலரும் மந்தா கினித்தடஞ்சேர்
செந்தா மரைமலர்நூ றாயிரத்தால் – நொந்தா
வயந்தன் தொடுத்தமைத்த வாசிகை சூட்டி
நயந்திகழும் நல்லுறுப்புக் கூட்டிப் – பயன்கொள்
குலமகளிர் செய்த கொழுஞ்சாந்தம் கொண்டு
நலமலிய ஆகம் தழீஇக் – கலைமலிந்த
கற்பகம் ஈன்ற கமழ்பட் டினைஉடுத்துப்
பொற்கழல்கள் கால்மேற் பொலிவித்து – விற்பகரும்
சூளா மணிசேர் முடிகவித்துச் சுட்டிசேர்
வாளார் நுதற்பட்டம் மன்னுவித்துத் – தோளா
மணிமகர குண்டலங்கள் காதுக்கு அணிந்தாங்கு
அணிவயிரக் கண்டிகை பொன்னாண் – பணிபெரிய
ஆரம் அவைபூண்டு அணிதிக ழும்சன்ன
வீரம் திருமார்பில் வில்லிலக – ஏருடைய
எண்தோட்கும் கேயூரம் பெய்துதர பந்தனமும்
கண்டோர் மனமகிழக் கட்டுறீஇக் – கொண்டு
கடிசூத் திரம்புனைந்து கங்கணங்கைப் பெய்து
வடிவுடைய கோலம் புனைந்தாங்கு – அடிநிலைமேல்
நந்திமா காளர்கடைகழிந்த போழ்தத்து
வந்து வசுக்கள் இருக்குரைப்ப – அந்தமில்சீர்

எண்ணருங் கீர்த்தி யெழுவர் இருடிகளும்
அண்ணல்மேல் ஆசிகள் தாமுணர்த்த – ஒண்ணிறத்த
பன்னிருவர் ஆதித்தர் பல்லாண்டு எடுத்திசைப்ப
மன்னம் மகதியன்யாழ் வாசிப்பப் – பொன்னியலும்
25 அங்கி கமழ்தூபம் ஏந்த யமன்வந்து
மங்கல வாசகத்தால் வாழ்த்துரைப்பச் செங்கண்
நிருதி முதலோர் நிழற்கலன்கள் ஏந்த
வருணன் மணிக்கலசந் தாங்கத் தெருவெலாம்
வாயு நனிவிளக்க மாமழை நீர்தெளிப்பத்
தூயசீர்ச் சோமன் குடையெடுப்ப – மேவியசீர்
ஈசானன் வந்துஅடைப்பை கைக்கொள்ள அச்சுனிகள்
வாயார்ந்த மந்திரத்தால் வாழ்த்துரைப்பத் – தூய
உருத்திரர்கள் தோத்திரங்கள் சொல்லக் குபேரன்
திருத்தகு மாநிதியஞ் சிந்தக் – கருத்தமைந்த
30 கங்கா நதியமுனை உள்ளுறுத்த தீர்த்தங்கள்
பொங்கு கவரி புடையிரட்டத் –தங்கிய
பைந்நாகம் எட்டும் சுடரெடுப்பப் பைந்தறுகண்
கைந்நாகம் எட்டும் கழல்வணங்க – மெய்ந்நாக
மேகம் விதானமாய் மின்னெலாம் சூழ்கொடியாய்
மேகத்து உருமும் முரசறையப் –போகஞ்சேர்
தும்புரு நாரதர்கள் பாடத் தொடர்ந்தெங்கும்
கொம்புருவ நுண்ணிடையார் கூத்தாட – எம்பெருமான்
விண்ணோர் பணிய உயர்ந்த விளங்கொளிசேர்
வெண்ணார் மழவிடையை மேல்கொண்டாங்கு எண்ணார்
35 கருத்துடைய பாரிடங்கள் காப்பொத்துச் செய்யத்
திருக்கடைகள் ஏழ்கழிந்த போதில் – செருக்குடைய
சேனா பதிமயில்மேல் முன்செல்ல யானைமேல்
ஆனாப்போர் இந்திரன் பின்படர – ஆனாத
அன்னத்தே யேறி அயன்வலப்பால் கைபோதக்
கன்னவிலும் திண்டோள் கருடன்மேல் – மன்னிய
மால்இடப்பால் செல்ல மலரார் கணைஐந்து
மேலிடப்பால் மென்கருப்பு வில்இடப்பால் – ஏல்வுடைய
சங்கணையும் முன்கைத் தடமுலையார் வேல்எய்வான்
கொங்கணையும் பூவாளி கோத்தமைத்த – ஐங்கணையான்
40 காமன் கொடிப்படைமுன் போதக் கதக்காரி
வாமன் புரவிமேல் வந்தணைய – நாமஞ்சேர்
வேழ முகத்து விநாயகனை உள்ளுறுத்துச்
சூழ்வளைக்கைத்தொண்டைவாய்க்கொண்டையொண்கண்–தாழ்கூந்தல்
மங்கை எழுவருஞ் சூழ மடநீலி
சிங்க அடலேற்றின் மேற்செல்லத் – தங்கிய
விச்சா தார்இயக்கர் கின்னரர் கிம்புருடர்
அச்சா ரணர்அரக்க ரோடசுரர் – எச்சார்வும்
சல்லரி தாளந் தகுணிகந் தந்தளகம்
கல்லலகு கல்ல வடம்மொந்தை – நல்லியலத்
45 தட்டழி சங்கம் சலஞ்சலம் தண்ணுமை
கட்டழியாப் பேரிகரதாளம் – கொட்டும்
குடமுழவம் கொக்கரை வீணை குழல்யாழ்
இடமாந் தடாரி படகம் – இடவிய
மத்தளர் துந்துபி வாய்ந்த முருடிவற்றால்
எத்திசை தோறும் எழுந்தியம்ப – ஒத்துடனே
மங்கலம் பாடுவார் வந்திறைஞ்ச மல்லரும்
கிங்கரரும் எங்குங் கிலுகிலுப்பத் தங்கிய
ஆறாம் இருதுவும் யோகும் அருந்தவமும்
மாறாத முத்திரையும் மந்திரமும் – ஈறார்ந்த
50 காலங்கள் மூன்றும் கணமும் குணங்களும்
வால கிலியரும் வந்தீண்டி – மேலை
இமையோர் பெருமானே போற்றி யெழில்சேர்
உமையாள் மணவாளா போற்றி – எமையாளும்
தீயாடி பேரற்றி சிவனே அடிபோற்றி
ஈசனே எந்தாய் இறைபோற்றி – தூயசீர்ச்
சங்கரனே போற்றி சடாமகுடத் தாய்போற்றி
பொங்கரவா பொன்னங் கழல்போற்றி – அங்கொருநாள்
ஆய விழுப்போர் அருச்சுனன் ஆற்றற்குப்
பாசுபதம் ஈந்த பதம்போற்றி – தூய
55 மலைமேலாய் போற்றி மயானத்தாய் வானோர்
தலைமேலாய் போற்றிதாள் போற்றி – நிலைபோற்றி
போற்றியெனப் பூமாரி பெய்து புலன்கலங்க
நாற்றினையும் எங்கும் நலம்பெருக – ஏற்றுக்
கொடியுட் பதாகையும் கொற்றக் குடையும்
வடிவுடைய தொங்கலும் சூழக் – கடிகமழும்
பூமாண் கருங்குழலார் உள்ளம் புதிதுண்பான்
வாமான ஈசன் வரும்போழ்திற் – சேமேலே

## குழாங்கள்

வாமான யீசன் மறுவில்சீர் வானவர்தம்
கோமான் படைமுழக்கங் கேட்டலுமே – தூமாண்பில்
60 வானநீர் தாங்கி மறையோம்பி வான்பிறையோடு
ஊனமில் சூலம் உடையவாய் – ஈனமிலா
வெள்ளை யணிதலால் வேழத்து உரிபோர்த்த
வள்ளலே போலும் வடிவுடைய – ஒள்ளிய
மாடநடுவில் மலரார் அமளியே
கூடிய போர்க்கல மாக்குறித்துக் – கேடில்
சிலம்பு பறையாகச் சேயரிக்கண் அம்பா
விலங்கு கொடும்புருவம் வில்லா – நலந்திகழும்
கூழைபின் தாழ வளைஆர்ப்பக் கைபோந்து
கேழ்கிளரும் அல்குலாந் தேருந்திச் – சூழொளிய
65 கொங்கைமாப் பொங்கக் கொழுநர் மனங்கவர
அங்கம் பொருதசைந்த ஆயிழையார் – செங்கேழற்
பொற்கவசத் துள்ளால் மணிநீர் முகஞ்சேர்த்தி
நற்பெருங் கோலம் மிகப்புனைந்து – பொற்புடைய
பேதை முதலாகப் பேரிளம்பெண் ஈறாக
மாதரவர் சேர மகிழ்ந்தீண்டிச் – சோதிசேர்
சூளிகையுஞ் சூட்டுஞ் சுளிகையுஞ் சுட்டிகையும்
வாளிகையும் பொற்றோடும் மின்விலக – மாளிகையின்
மேலேறி நின்று தொழுவார் துயர்கொண்டு
மாலேறி நின்று மயங்குவார் – நூலேறு
70 தாமமே தந்து சடாதாரி நல்கானேல்
யாமமேல் எம்மை அடும்என்பார் – காமவேள்
ஆமென்பார் அன்றென்பார் ஐயுறுவார் கையெறிவார்
தாம்முன்னை நாணோடு சங்கிழப்பார் – பூமன்னும்

பொன்னரி மலையைப் பூண்பார்அப் பூண்கொண்டு
துன்னரி மாலையாச் சூடுவார் – முன்னம்
ஒருகண் எழுதிவிட்டு ஒன்றெழுதாது ஓடித்
தெருவம் புகுவார் திகைப்பார் – அருகிருந்த
கண்ணாடி மேற்பஞ்சு பெய்வார் கிளியென்று
பண்ணாடிச் சொற்பந்துக் குற்றுரைப்பார் – அண்ணல்மேல்
75 கண்ணென்னும் மாசாலங் கோலிக் கருங்குழலார்
திண்ண நிறைத்தாழ் திறந்திட்டார் – ஒண்ணிறத்த

## பேதை

பேதைப் பருவம் பிழையாதாள் வெண்மணலால்
தூதைச் சிறுசோறு அடுதொழிலாள் – தீதில்
இடையாலும் ஏக்கழுத்த மாட்டாள் நலஞ்சேர்
உடையாலும் உள்ளுருக்க கில்லாள் – நடையாலும்
கௌவைநோய் காளையரைச் செய்யாள் கதிர்முலைகள்
எவ்வநோய் செய்யும் தொழில்பூணாள் – செவ்வனேர்
நோக்கிலும் நோய்நோக்கம் நோக்காள் தன்செவ்வாயின்
வர்க்கும் பிறர்மனத்தை வஞ்சியாள் – பூக்குழலும்
80 பாடவந் தோன்ற முடியாள் இளவேய்த்தோள்
ஆடவர் தம்மை அயர்வுசெய்யாள் – நாடோறும்
ஒன்றுரைத்து ஒன்றுன்னி ஒன்றுசெய்து ஒன்றின்கண்
சென்ற மனத்தினளாம் சேயிழையாள் – நன்றாகத்
தாலி கழுத்தணிந்து சந்தனத்தால் மெய்பூசி
நீல அறுவை விரித்துடுத்துக் – கோலஞ்சேர்
பந்தரில் பாவைகொண்டாடும் இப்பாவைக்குத்
தந்தையார் என்றொருத்தி தான்வினவ – அந்தமில்சீர்
ஈசன் எரியாடி என்ன அவனையோர்
காய்சின மால்விடைமேற் கண்ணுற்றுத் – தாய்சொன்ன
85 இக்கணக்கு நோக்காள் இவள்போல்வாள் காமன்நூல்
நற்கணக்கின் மேற்சிறிதே நாட்செய்தாள் – பொற்புடைய

## பெதும்பை

பேரொளிசேர் காட்சிப் பெதும்பைப் பிராயத்தாள்
காரொளிசேர் மஞ்ஞைக் கவின்மயலாள் – சீரொளிய
தாமரை ஒன்றின் இரண்டு குழையிரண்டு
காமருவி கெண்டையோர் செந்தொண்டை – தூமருவி
முத்த முரிவெஞ் சிலைசுட்டி செம்பவளம்
வைத்தது போலும் மதிமுகத்தாள் – ஒத்தமைந்த
கங்கணம் சேர்ந்திலங்கு கையாள் கதிர்மணியின்
கிங்கிணி சேர்ந்த திருந்தடியாள் – ஒண்கேழல்
90 அந்துகில் சூழ்ந்தசைந்த அல்குலாள் ஆய்பொதியில்
சந்தனந் தோய்ந்த தடந்தோளாள் – வந்து
திடரிட்ட திண்வரைக்கண் செய்த முலையாள்
கடல்பட்ட இன்னமுதம் அன்னாள் – மடல்பட்ட
மாலை வளாய குழலாள் மணம்நாறு
சோலை இளங்கிளிபோல் தூமொழியாள் – சாலவும்
வஞ்சனைசெய்து மனங்கவரும் கண்ணுக்கு
அஞ்சனத்தை இட்டங்கு அழகாக்கி – எஞ்சா
மணியாரம் பூண்டொழி மெல்விரலிற் சேர்த்தி
அணியார் வளைதோள்மேல் மின்ன – மணியார்த்த
95 தூவெண் மணற்கொண்டு தோழியரும் தானுமாய்க்
காமன் உருவம் வரஎழுதிக் – காமன்
கருப்புச் சிலையும் மலரம்புந் தேரும்
ஒருப்பட்டு உடன்எழுதும் போழ்தில் – விருப்பூரும்
தேனமரும் கொன்றையந்தார்த் தீர்த்தன் சிவலோகன்
வானமால் ஏற்றின்மேல் வந்தணையத் – தானமர
நன்றறிவார் சொன்ன நலந்தோற்று நாண்தோற்று
நின்றறிவு தோற்று நிறைதோற்று – நன்றாகக்
கைவண்டுங் கண்வண்டும் ஓடக் கலைஓட
நெய்விண்ட பூங்குழலாள் நின்றொழிந்தாள் –மொய்கொண்ட

## மங்கை

100 மங்கை யிடங்கடவா மாண்பினாள் வானிழிந்த
கங்கைச் சுழியனைய உந்தியாள் – தங்கிய
அங்கை கமலம் அடிகமலம் மான்நோக்கி
கொங்கை கமலம் முகங்கமலம் – பொங்கெழிலார்
இட்டிடையும் வஞ்சி இரும்பணைத்தோள் வேயெழிலார்
பட்டுடைய அல்குலுந் தேர்த்தட்டு – மட்டுவிரி
கூந்தல் அறல்பவளம் செய்யவாய் அவ்வாயில்
ஏய்ந்த மணிமுறுவல் இன்முத்தம் – வாய்ந்தசீர்
வண்டு வளாய வளர்வா சிகைசுட்டிக்
கண்டி கழுத்திற் கவின்சேர்த்திக் – குண்டலங்கள்
105 காதுக்கு அணிந்து கனமே கலைதிருத்தித்
தீதில் செழுங்கோலம் சித்திரித்து – மாதராள்
பொற்கூட்டிற் பூவையை வாங்கி அதனோடும்
சொற்கோட்டி கொண்டிருந்த ஏல்வைக்காண் – நற்கோட்டு
வெள்ளி விலங்கல்மேல் வீற்றிருந்த ஞாயிறுபோல்
ஒள்ளிய மால்விடையை மேல்கொண்டு – தெள்ளியநீர்
தாழும் சடையான் சடாமகுடம் தோன்றுதலும்
வாழுமே மம்மர் மனத்தளாய்ச் – சூழொளியான்
தார்நோக்கும் தன் தாரும் நோக்கும் அவனுடைய
ஏர்நோக்கும் தன்னது எழில் நோக்கும் – பேரருளான்
110 தோள்நோக்கும் தன்தோளும்நோக்கும் அவன்மார்பின்
நீள்நோக்கம் வைத்து நெடிதுயிர்த்து – நாண்நோக்காது
உள்ளம் உருக ஒழியாத வேட்கையாம்
வெள்ளத் திடையழுந்தி வெய்துயிர்த்தாள் – ஒள்ளிய

## மடந்தை

தீந்தமிழின் தெய்வ வடிவாள் திருந்தியசீர்
வாய்ந்த மடந்தைப் பிராயத்தாள் – ஏய்ந்தசீர்
ஈசன் சிலையும் எழில்வான் பவளமும்
சேய்வலங்கை வேலுந் திரள்முத்தும் – பாசிலைய
வஞ்சியும் வேயும் வளர்தா மரைமொட்டும்
மஞ்சில்வரு மாமதிபோல் மண்டலமும் – எஞ்சாப்
115 புருவமும் செவ்வாய் கண்ணும் எயிறும்
உருவ நுசுப்பும்மென் தோளும் – மருவினிய
கொங்கையும் வாண்முகமு மாக்கொண்டாள் கோலஞ்சேர்
பங்கயப் போதனைய சேவடியாள் – ஒண்கேழல்
வாழைத்தண் டன்ன குறங்கினாள் வாய்ந்தசீர்
ஆழித்தேர்த் தட்டனைய அல்குலாள் – ஊழித்
திருமதியம் மற்றொன்றாம் என்று முகத்தை
உருவுடைய நாண்மீன்சூழ்ந் தாற்போல் – பெருகொளிய
முத்தாரங் கண்டத்து அணிந்தாள் அணிகலங்கள்
மொய்த்தார வாரம் மிகப்பெருகி – வித்தகத்தால்

120 கள்ளும் கடாமும் கலவையுங் கைபோந்திட்டு
உள்ளும் புறமும் செறிவமைத்துத் – தெள்ளொளிய
காளிங்கம் சோதி கிடப்பத் தொடுத்தமைத்த
தாளிம்பத் தாமம் நுதல்சேர்த்தித் – தோளெங்கும்
தண்ணறும் சந்தனம் கொண்டு அப்பிச் சதிர்சாந்தை
வண்ணம் பெறமிசையே மட்டித்தாங்கு ஒண்ணுதலாள்
தன்னமர் தோழியர்கள் சூழத் தவிசேறிப்
பின்னுமோர் காமரம் யாழமைத்து – மன்னும்
விடவ்வண்ணக் கண்டத்து வேதியன்மேல் இட்ட
மடல்வண்ணம் பாடும் பொழுதீண்டு – அடல்வல்ல
125 வேல்வல்லான் வில்வல்லான் மெல்லியலார்க்கு எஞ்ஞான்றும்
மால்வல்லான் ஊர்கின்ற மால்விடையின் – கோல
மணியேறு கேட்டாங்கு நோக்குவான் சால
அணியேறு தோளானைக் கண்டாங்கு அணியார்ந்த
கோட்டி ஒழிய எழுந்து குழைமுகத்தைக்
கோட்டி நுதல்சிவப்ப வாய்துலக்கி – நாட்டார்கள்
எல்லாருங் கண்டார் எனக்கடவுள் இங்காய
நல்லாய் படுமேல் படுமென்று – மெல்லவே
செல்ல லுறுஞ்சரணம் கம்பிக்கும் தன்னுறுநோய்
சொல்லலுறும் சொல்லி உடைசெறிக்கும் நல்லாகம்
130 காணல் உறுங்கண்கள் நீர்மல்கும் காண்பார்முன்
நாணல் உறும்நெஞ்சம் ஒட்டாது – பூணாகம்
புல்லலுறும் அண்ணல்கை வாரானென்று இவ்வகையே
அல்லலுறும் அழுந்தும் ஆழ்துயரால் – மெல்லியலாள்
தன்னுருவம் பூங்கொன்றைத் தார்கொள்ளத் தான்கொன்றைப்
பொன்னுருவம் கொண்டு புலம்புற்றாள் – பின்னொருத்தி

## அரிவை

செங்கேழல் தாமரைபோல் சீறடியாள் தீதிலா
அங்கேழ் அரிவைப் பிராயத்தாள் – ஒண்கேழல்
திங்களுந் தாரகையும் வில்லும் செழும்புயலும்
தங்கொளிசேர் செவ்வாயும் உண்மையால் பொங்கொளிசேர்
135 மின்னார்வான் காட்டும் முகவொளியாள் மெய்ம்மையே
தன்னார்வார் இல்லாத் தகையமையாள் – எந்நாளும்
இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப் பென்னும் – சொல்லாலே
அல்குற்கு மேகலையைச் சூழ்ந்தாள் அணிமுலைமேல்
மல்கிய சாந்தொடு பூண்புனைந்து நல்கூர்
இடையிடையே உள்ளுருகக் கண்டாள் எழிலார்
நடைபெடை அன்னத்தை வென்றாள் – அடியிணைமேல்
பாடகங் கொண்டு பரிசமைத்தாள் பன்மணிசேர்
சூடகம் முன்கை தொடர்வித்தாள் – கேடில்சீர்ப்
140 பொன்னரி மாலை தலைக்கணிந்து பூண்கொண்டு
மன்னுங் கழுத்தை மகிழ்வித்தாள் – பொன்னனாள்
இன்னிசை வீணையை வாங்கி இமையவர்தம்
அண்ணல்மேல் தானிட்ட ஆசையால் – முன்னமே
பாடல் தொடங்கும் பொழுதிற் பரஞ்சோதி
கேடிலா மால்விடைமேல் தோன்றுதலும் – கூடிய
இன்னிசையும் இப்பிறப்பும் பேணும் இருந்தமிழும்
மன்னிய வீணையுங் கைவிட்டுப் – பொன்னனையீர்
இன்றன்றே காண்பது எழில் நலம் கொள்ளேனேல்
நன்றன்றே பெண்மை நமக்கென்று – சென்றவன்தன்
145 ஒண்களபம் ஆடும் ஒளிவாள் முகத்திரண்டு
கண்களபம் ஆடுவபோல கட்டுரைத்தும் – ஒண்கேழல்
கூந்தல் அவிழ்க்கும் முடிக்குங் கலை திருத்தும்
காந்தம் திமிரும் முலையார்க்கும் – பூந்துகிலைச்
சூழும் அவிழ்க்கும் தொழும் அழும் சோர்துயருற்று
ஆழும் அழுந்தும் அயாவுயிர்க்கும் – சூழ்ஒளிய
அங்கை வளைதொழுது காத்தாள் கலைகாவாள்
நங்கை மிவளும் நலந்தோற்றாள் – அங்கொருத்தி

## தெரிவை

ஆரா அமுதம் அவயவம் பெற்றனைய
சீரார் தெரிவைப் பிராயத்தாள் – ஓரா
150 மருளோசை இன்மழலை வாய்ச்சொலால் என்றும்
இருள்தீர் புலரியே ஒப்பாள் – அருளாலே
வெப்பம் இளையவர்கட்கு ஆக்குதலால் உச்சியோடு
ஒப்பமையக் கொள்ளும் உருவத்தாள் – வெப்பந்தீர்ந்து
அந்தளிர்போல் சேவடியும் அங்கையும் செம்மையால்
அந்திவான் காட்டும் அழகினாள் – அந்தமில்
சீரார் முகம்மதியம் ஆதலால் சேயிழையாள்
ஏரார் இரவின் எழில்கொண்டாள் – சீராரும்
கண்ணார் பயோதரமும் நுண்ணிடையும் உண்மையால்
தண்ணிளங் காரின் சவிகொண்டாள் – வண்ணஞ்சேர்
155 மாந்தளிர் மேனி முருக்கிதழ்வாய் ஆதலால்
வாய்ந்த இளவேனில் வண்மையாள் – மாந்தர்
அறிவுடையீர் நின்மின்கள் அல்லார்பேரும் என்று
பறையறைவ போலுஞ் சிலம்பு – முறைமையால்
சீரார் திருந்தடிமேல் சேர்த்தினாள் தேர்அல்குல்
ஓராது அகலல் உறாதென்று – சீராலே
அந்துகிலும் மேகலையும் சூழ்ந்தாள் அணிமுலைகள்
மைந்தர் மனங்கவரும் என்பதனால் – முந்துறவே
பூங்கச்சி னால்அடையப் பூட்டுறீஇப் பொற்றொடியால்
காம்பொத்த தோளிணையைக் காப்பேவி– வாய்ந்தசீர்
160 நற்கழுத்தை நல்லாரத் தால்மறைத்துக் காதுக்கு
விற்பகருங் குண்டலங்கள் மேவுவித்து – மைப்பகரும்
காவியங் கண்ணைக் கதந்தணிப்பாள் போலத்தன்
தாவிய அஞ்சனத்தை முன்னூட்டி – யாவரையும்
ஆகுலம் ஆக்கும் அழகினாள் அன்னமும்
கோகிலமும் போலுங் குணத்தினாள் – ஆகிப்
பலகருதிக் கட்டிக் கரியவாய்க் கோடி
அலர்சுமந்து கூழைய ஆகிக் – கலைகரந்து
உள்யாதும் இன்றிப் புறங்கமழ்ந்து கீழ்தாழ்ந்து
கள்ளாவி நாறுங் கருங்குழலாள் – தெள்ளொளிய
165 செங்கழுநீர்ப் பட்டுடுத்துச் செங்குங் குமம்எழுதி
அங்கழுநீர்த் தாமம் நுதல்சேர்த்திப் – பொங்கெழிலார்
பொற்கவற்றின் வெள்ளிப் பலகை மணிச்சூது
நற்கமைய நாட்டிப் பொரும்பொழுதில் – விற்பகிரும்
தோளான் நிலைபேறு தோற்றங்கே டாய்நின்ற
தாளான் சடாமகுடம் தோன்றுதலும் – விற்பகிரும்
நாணார் நடக்க நலத்தார்க்கு இடையில்லை
ஏணார் ஒழிக எழிலொழிக – பேணும்
குலத்தார் அகன்றிடுக குற்றத்தார் வம்மின்
நலத்தீர் நினைமினீர் என்று – சொலற்கரிய
170 தேவாதி தேவன் சிவனாயில் தேன்கொன்றைப்
பூவாரலங்கல் அருளாது – போவானேல்

கண்டால் அறிவன் எனச்சொல்லிக் கைசோர்ந்து
வண்டார்பூங் கோதை வளந்தோற்றாள் – ஒண்டாய

### பேரிளம் பெண்

பெண்ணரசாய்த் தோன்றிய பேரிளம் பெண்மையாள்
பண்ணரும் இன்சொல் பணிமொழியாள்– மண்ணின்மேல்
கண்டுகேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே வுளவென்று – பண்டையோர்
கட்டுரையை மேம்படுத்தாள் கண்ணாடி மண்டலம்போல்
விட்டிலங்கு நல்லுகிர்சேர் மெல்விரலாள் கட்டரவம்
175 அஞ்சப் பரந்தகன்ற அல்குலாள் ஆய்நலத்த
வஞ்சிக் கொடிநுடங்கும் நுண்ணிடையாள் –எஞ்சாத
பொற்செப்பு இரண்டு முகடு மணியழுத்தி
வைத்தன போல வளர்ந்தேந்தி – ஒத்துச்
சுணங்கும் திதலையும் சூழ்போந்து கண்டார்க்கு
அணங்கும் அமுதமாய்த் தோன்றி – இணங்கொத்த
கொங்கையாள் கோலங்கட்கு எல்லாமோர் கோலமாம்
நங்கையாள் நாகிளவேய்த் தோளினாள் – அங்கையால்
காந்தட் குலம்பழித்தாள் காமவேள் காதலாள்
சாந்தம் இலங்கும் அகலத்தாள் – வாய்ந்துடனே
180 ஏய்ந்து குவிந்து திரண்டு மறிந்திருபால்
தேய்ந்து துடித்த செழும்பவளம் – காய்ந்திலங்கி
முத்தமுந் தேனும் பொதிந்து முனிவரையும்
சித்தந் திறைகொள்ளும் செவ்வாயாள் –ஒத்து
வரிகிடந்து அஞ்சனம் ஆடி மணிகள்
உருவம் நடுவுடைய வாகிப் – பெருகிய
தண்ணங் கயலுஞ்சலஞ்சலமுந் தோன்றுதலால்
வண்ணங் கடலனைய வாட்கண்ணாள் –ஒண்ணிறத்த
குண்டலஞ்சேர் காதினாள் கோலக் குளிர்மதிய
மண்டலமே போலும் மதிமுகத்தாள் – வண்டலம்ப
185 யோசனை நாறு குழலாள் ஒளி நுதல்மேல்
வாசிகை கொண்டு வடிவமைத்தாள் – மாசில்சீர்ப்
பாதாதி கேசம் பழிப்பிலாள் பாங்கமைந்த
சீதாரி கொண்டுதன் மெய்புகைத்தாள் – மாதார்ந்த
பண்கவருஞ் சொல்லார்பல் லாண்டேத்தப் பாயொளிசேர்
வெண்கவரி வெள்ளத் திடையிலிருந்து –ஒண்கேழற்
கண்ணவனை அல்லாது காணா செவி அவனது
எண்ணருஞ்சீர் அல்லது இசைகொள்ளா – அண்ணல்
கழலடி அல்லது கைதொழா அஃதான்
றழலங்கைக் கொண்டான்மாட் டன்பென் – றெழிலுடைய
190 வெண்பா விரித்துரைக்கும் போழ்தில் விளங்கொளிசேர்
கண்பாவு நெற்றிக் கறைக்கண்டன் – விண்பால்
அரியரணம் சொற்றாங்கு அலைபுனலும் பாம்பும்
புரிசடைமேல் வைத்த புராணன் – எரியிரவில்
ஆடும் இறைவன் அமரர்குழாம் தற்சூழ
மாட மறுகில் வரக்கண்டு – கேடில்சீர்
வண்ணச் சிலம்படி மாதரார் தாமுண்ட
கண்ணெச்சில் எம்மையே ஊட்டுவான் அண்ணலே
வந்தாய் வளைகவர்ந்தாய் மாலும் அருந்துயரும்
தந்தாய் இதுவோ தகவென்று – நொந்தாள்போல்
195 கட்டுரைத்துக் கைசோர்ந்து அகமுருகி மெய்வெளுத்து
மட்டிவரும் பூங்கோதை மால்கொண்டாள் –கொட்டினர்
பண்ணாரும் இன்சொற் பணைப்பெருந்தோள்செந்துவர்வாய்
பெண்ஆர வாரம் பெரிதன்றே – விண்ஓங்கி
197 மஞ்சடையும் நீள்குடுமி வாள்நிலா வீற்றிருந்த
செஞ்சடையான் போந்த தெரு.

### காப்பு

301. பெண்ணீர்மை காமின் பெருந்தோள் இணைகாமின்
உண்ணீர்மை மேகலையும் உள்படுமின்– தெண்ணீரக்
காரேறு கொன்றையத் தார்க் காவாலி கட்டங்கன்
ஊரேறு போந்த துலா.

## நக்கீர தேவநாயனார் அருளிய
## 1. கயிலை பாதி காளத்தி பாதித் திருவந்தாதி

### கயிலை

302.சொல்லும் பொருளுமே தூத்திரியும் நெய்யுமா
நல்லிடிஞ்சல் என்னுடைய நாவாகச் – சொல்லரிய
வெண்பா விளக்கா வியன்கயிலை மேலிருந்த
பெண்பாகற்கு ஏற்றினேன் பெற்று.

### காளத்தி

303.பெற்ற பயனிதுவே அன்றே பிறந்தியான்
கற்றவர்கள ஏத்துஞ்சீர்க் காளத்திக் –கொற்றவர்க்குத்
தோளாகத் தாடரவம் சூழ்ந்தணிந்த அம்மானுக்கு
ஆளாகப் பெற்றேன் அடைந்து.

### கயிலை

304. அடைந்துய்ம்மின் அம்மானை உம்மாவி தன்னைக்
குடைந்துண்ண எண்ணியவெங் கூற்றம் – குடைந்துநும்
கண்ணுள்ளே பார்க்கும் பொழுது கயிலாயத்து
அண்ணலே கண்டீர் அரண்.

### காளத்தி

305. அரண் ஒருமூன்றும் ஆரழலாய் வீழ
முரணம்பு கோத்த முதல்வன் சரணமே
காணுமால் உற்றவன்தன் காளத்தி கைதொழுது
பேணுமால் உள்ளம் பெரிது.


### கயிலை

306. பெரியவர்கா ணீர்என் உள்ளத்தின் பெற்றி
தெரிவரிய தேவாதி தேவன் – பெரிதும்
திருத்தக்கோர் ஏத்தும் திருக்கயிலைக் கோனை
இருக்கத்தான் போந்தது இடம்.

### காளத்தி

307. இடப்பாகம் நீள்கோட்டு இமவான் பயந்த
மடப்பாவை தன்வடிவே ஆனால் – விடப்பாற்
கருவடிசேர் கண்டத்தெம் காளத்தி ஆள்வார்க்கு
ஒருவடிவே அன்றால் உரு.

# பன்னிரு திருமுறை



பதிப்பாசிரியர்

முனைவர் ச. வே. சுப்பிரமணியன்

மணிவாசகர் பதிப்பகம்

## அறிஞர் ச.வே. சுப்பிரமணியன்



81 வயதாகும் ச.வே.சு. என்ற மூன்று எழுத்துப் பெயர், தமிழ் உலகு நன்கு அறிந்த பெயர். நெல்லை மாவட்டத்தில் குற்றாலத்திற்குக் கிழக்கே 19 கிலோமீட்டரில் தமிழூர் என்ற ஒன்றைத் தோற்றுவித்து, அங்கு வாழ்ந்து வருகிறார். பள்ளிக் கல்வி, அம்பாசமுத்திரம் தீர்த்தபதி உயர்நிலைப் பள்ளியில் அமைந்தது. இடைநிலைக் கல்வி, திருநெல்வேலி ம.தி.தா. இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. தமிழ்ச் சிறப்பு வகுப்பு (B.A. Hons), அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் (1950–53) அமைந்தது. முனைவர் பட்டம், கேரளப் பல்கலைக் கழகத்தில், பேராசிரியர் வ.அய். சுப்பிரமணியம் அவர்கள் நெறிகாட்டுதலிலும், மேற்பார்வையிலும் நடைபெற்றது.

தமிழ்த்துறைத் தலைவராகி, அங்கிருந்து உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் முதன்மை அலுவல் ஆட்சியராகவும், இயக்குநராக வும் அவர் கல்விப் பயணம் அமைந்தது.

1987–இல் பணிநிறைவான பின்பு, தமிழூரில் உலகத் தமிழ்க்கல்வி இயக்கம் என்ற அமைப்பின் மதிப்புறு இயக்குநராகத் தற்போது பணியாற்றி வருகிறார்.

தமிழில் இதுவரை 101 நூல்களையும், ஆங்கிலத்தில் 5 நூல்களையும், மலையாளத்தில் சிலப்பதிகாரம் – வஞ்சிக் காண்டத்தையும் மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளார்.

இவர் வழிகாட்டுதலில், கேரளம், மதுரை காமராஜர், சென்னை, பெங்களூர் ஆகிய பல்கலைக்கழகங்களின் வழி, 44 பேர் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர்.

சிலப்பதிகாரம் பற்றி 10 நூல்களையும், தமிழ் இலக்கண நூல்களாக 9 நூல்களையும் வெளியிட்டுள்ளார். தொல்காப்பியம் – தெளிவுரை 10 ஆவது பதிப்பாக 2009இல் வந்துள்ளது. தொல்காப்பியத்தை ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்துள்ளார்.

**வழங்கப்பெற்ற விருதுகள்:** செந்தமிழ்ச் செம்மல் விருது, இராமநாதபுரம் மன்னர் பாஸ்கர சேதுபதி விருது, சாகித்திய அக்காதெமி வழங்கிய பாஷா சம்மான் விருது, தமிழாகரர் விருது, நல்அறிஞர் விருது, சைவ நன்மணி விருது, மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை விருது, ஔவைத் தமிழ் அருளாளர் விருது, தமிழியக்கச் செம்மல் விருது, ராஜா அண்ணாமலைச் செட்டியார் அறக்கட்டளை விருது (ரூ. 1 இலட்சம் பரிசு), தொல்காப்பியச் செம்மல் விருது, சென்னை கம்பன் கழக விருது, தமிழக அரசின் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது (ரூ. 1 இலட்சம்), அறவாணர் அறக்கட்டளை வாழ்நாள் சாதனையாளர் விருது ஆகியன.



விலை

ரூ 500/=